# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI

## O.S.No. 209/2018 C/w210/2018 C/w262/2016

## PW – 1

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : சுந்தராம்பாள் | | : | |
| **Father Name** | : பழனிச்சாமி | | : | |
| **Village** | : | **Calling** | : | |
| **Taluk** | : | **Age** | : | /2024 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of January 2025)**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 2–ம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 03.04.2006–ம் தேதியிட்ட செட்டில்மெண்டு பத்திரம் (பத்திர எண்.3209/2006) சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.1 ஆகவும்

2) 08.09.2008–ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ரத்து பத்திரம் (பத்திர எண்.12120/2008) சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.2 ஆகவும்

3) 03.04.2006–ம் தேதியிட்ட பட்டா பாஸ் புக் அசல் – வா.சா.ஆ.3 ஆகவும்

4) 02.08.2010–ம் தேதியிட்ட கணினி பட்டா அசல் – வா.சா.ஆ.4 ஆகவும்

5) 09.04.2009–ம் தேதியிட்ட 3–வது பிரதிவாதி பெயரிலுள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.5 ஆகவும்

6) 03.12.2010–ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் அசல் – வா.சா.ஆ.6 ஆகவும்

7) 19.11.2010–ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் (பத்திர எண்.11219/2010) சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.7 ஆகவும்

8) 10.11.2011–ம் தேதியிட்ட K. லோகநாதன் பெயரிலுள்ள கிரையப்பத்திரம் (பத்திர எண்.2209/2011) சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.8 ஆகவும்

9) 19.07.2014–ம் தேதியிட்ட நான் கொடுத்த புகார் மனு அலுவலக நகல் வா.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் கணியாம்பூண்டியில் எனது தோட்டத்தில் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் பெயர் பழனிச்சாமி. எனது கணவருக்கு சொத்து எதுவும் கிடையாது. எனது தகப்பனார் கடந்த 6 மாதத்திற்கு முன்பு இறந்து போய்விட்டார். வயது முதிர்வு காரணமாக 105 வயதில் இறந்து போய்விட்டார். எனது அப்பா இறந்த காலம் வரையில் நானும், எனது அக்கா ருக்குமணியும் சேர்ந்து பராமரித்து வந்தோம். எனது அக்கா ருக்குமணி சேவூர் லூர்துபுரத்தில் குடியிருந்து வருகிறார். நான் 30 ஆண்டு காலம் எனது அப்பாவுடன் ஒன்றாக தோட்டத்தில் வசித்து வந்தோம். நாங்கள் 3 வழக்குகளை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 3 வழக்கிலும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். தாவா சொத்து ஆதியில் எனது அப்பாவிற்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டது. அந்த சொத்தில் எனது அப்பாவும் விவசாயம் பார்த்து வந்தார் என்றால் சரிதான்.

எனது அப்பா அவர் விவசாயம் பார்த்து வந்த காலத்தில் அவிநாசியில் கூட்டுறவு நிலவள வங்கியில் விவசாயக் கடன் பெற்றார் என்றால் சரிதான். எனது அப்பா மேற்படி வீதம் அடிக்கடி அந்த வங்கியிலும், வெளி நபர்களிடமும் கடன் வாங்கி வந்தார் என்றால் இல்லை, எனது அண்ணன் நடராஜன் என்பவருக்காக வேண்டி தான் எனது அப்பா கடன் வாங்கினார். ஆதியிலிருந்து எனது அண்ணன் நடராஜ் எங்களோடு இருந்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் இறந்து போன பிறகு நான் எனது அப்பாவுடன் தாவா சொத்தில் தான் வசித்து வந்தேன். எனது அண்ணனும், அந்த தாவா சொத்தில் தான் வசித்து வந்தார்.

2. நான் நல்லிசண்முகசுந்தரம் என்பவர் மீது அ.வ.எண்.209/2018 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு தமிழில் எழுத படிக்க தெரியாது, கைரேகை தான் வைப்பேன். அ.வ.எண்.209/2018 தாவா பிராதுவில் பாரா 4–ல் 10,11,12 வரிகளில் எனது அண்ணன் நடராஜ் சொத்துக்களை விற்க பல முயற்சிகளை செய்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் அ.வ.எண்.210/2018 என்ற வழக்கை விஸ்வலிங்கசுவாமி என்பவர் மீது நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த அ.வ.எண்.210/2018 என்ற வழக்கின் தாவா பிராது பாரா 4–ல் 10,11,12 வரிகளில் எனது அண்ணன் நடராஜ் சொத்துக்களை விற்க பல முயற்சிகளை செய்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் பாரா 5–ல் 9,10,11 வரிகளில் எனது அண்ணன் நடராஜ் சொத்துக்களை விற்க பல முயற்சிகளை செய்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது அண்ணன் நடராஜ் எதற்காக பல முறை சொத்தை விற்க முயற்சி செய்தார் என்றால், என்னையும், எனது சகோதரி ருக்குமணியையும் ஏமாற்றி சொத்தை விற்று

வரும் பணத்தை அபகரித்து கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்தார். அவ்வாறு எனது அண்ணன் சொத்தை விற்க பல முறை முயற்சி செய்ததை நாங்கள் எவ்வாறு தடுத்து முறியடித்தோம் என்றால் எனது அப்பாவை கையெழுத்து போட வேண்டாம் என்று சொல்லி தடுத்து விட்டோம். மேற்படி வீதம் எனது அப்பாவை கையெழுத்து போட வேண்டாம் என்று எப்போது சொல்லி தடுத்தோம் என்றால் எனது அப்பா எனது அண்ணனுக்கு கூட்டுறவு நிலவள வங்கியில் கடன் வாங்கி கொடுத்து அந்த கடனை திருப்பி செலுத்தாததால், அந்த வங்கியில் இருந்து கடனை திருப்பி கேட்டு நடவடிக்கை எடுத்த போது எனது அப்பா என்னிடமும், எனது சகோதரிகளிடமும் பணத்தை கட்டுமாறு கேட்டதின் பேரில் நாங்கள் 3 பேரும் அந்த கடனை கட்டி அடைத்து விட்டோம்.

3. அவ்வாறு எனது அண்ணன் நடராஜ் தாவா சொத்தை விற்க முயற்சி செய்த காலத்தில் இருந்து எங்களுக்கும், எனது அண்ணனுக்கும் பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான். எனது அண்ணன் நடராஜ் எனது அப்பாவை அழைத்து சென்று ஏமாற்றி கையெழுத்து வாங்கியது எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி வீதம் எனது அண்ணன் எனது அப்பாவை ஏமாற்றி கையெழுத்து வாங்கிய விபரம் எனக்கு தெரிய வந்த பின்னிட்டு நானும், எனது சகோதரி ருக்குமணியும் சேர்ந்து வழக்கு போட்டோம். வழக்கு போட்ட பிறகும் நான் எனது அப்பாவோடு தான் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கு ஒரு பெண் பிள்ளை, ஒரு ஆண் மகன் பிறந்தது. எனது அண்ணன் சொத்தை விற்க வேண்டி முயற்சித்த போது சொத்து எனது குழந்தைகளை விட்டு போய்விடக்கூடாது என்பதற்காக தான் தடுத்தேன் என்றால் சரிதான். அதேபோல் தாவா சொத்து எங்களை விட்டு வேறு யாருக்கும் சென்று விடக்கூடாது என்பதற்காக தான் தடுக்க முயற்சி செய்தேன். மேற்படி வீதம் நான் தடுத்தது போல

லோகநாதன் என்பவர் சொத்தை வாங்கும் பொழுதும் நாங்கள் சென்று அவரை எச்சரித்தோமா என்றால் இல்லை, அவர் யார் என்றே எனக்குத் தெரியாது. லோகநாதன் தாவா சொத்திற்கு தென்புறத்தில் உள்ள 3 ஏக்கர் சொத்தை வாங்கியுள்ளார் என்றால் சரிதான். லோகநாதன் தாவா சொத்தை வாங்குகிறார் என்பதை புரோக்கர்கள் மூலம் நான் தெரிந்து கொண்டேன். அதேபோல் லோகநாதன் தாவா சொத்திற்குள் வந்து அக்கிரமமாக கம்பி வேலி போட முயற்சித்தார், அதை நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து தடுத்துவிட்டேன்.

4. விஸ்வலிங்கசாமி, நல்லிசண்முகசுந்தரம் ஆகிய இருவரும் நில புரோக்கர் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.209/2018, மற்றும் அ.வ.எண்.210/2018 ஆகிய இரண்டு வழக்குகளிலும் நாங்கள் சொல்லியுள்ள விபரங்கள் உண்மையானது என்றால் சரிதான். அ.வ.எண்.209/2018 என்ற வழக்கில் 8 வது –பாராவில் 10–வது வரியில் எனது அப்பா, எனது அண்ணன் நடராஜ், நல்லிசண்முகசுந்தரம் ஆகிய மூவரும் சேர்ந்து ஒரு விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தை போட்டுள்ளார்கள் என்று சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அதேபோல் அ.வ.எண்.210/2018 என்ற வழக்கில் 8–வது பாராவில் 10 மற்றும் 11–வது வரியில் எனது அப்பா, எனது அண்ணன் நடராஜ், விஸ்வலிங்கசாமி ஆகிய மூவரும் சேர்ந்து ஒரு விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தை போட்டுள்ளார்கள் என்று சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி விற்கிரைய ஒப்பந்த பத்திரங்களில் எனது அப்பா கையொப்பம் போட்டுக்கொடுத்த விபரம் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான், எனது அப்பா எந்த ஒரு அக்ரிமெண்டிலும் கையெழுத்து போட்டுக்கொடுத்தது கிடையாது. எனது அப்பாவை ஏமாற்றி இரண்டு அக்ரிமெண்ட்களையும் எழுதி வாங்கியது நல்லிசண்முகசுந்தரம் மற்றும்

விஸ்வலிங்கசாமியா அல்லது எனது அண்ணன் நடராஜா என்றால் அது எனக்குத் தெரியாது. அவ்வாறு எனது அப்பா போட்டுக்கொடுத்த கையெழுத்துகள் மோசடியாக பெறப்பட்டது என்று எனது வழக்கில் குறிப்பிட்டு வாதம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வீதம் ஏற்பட்டுள்ள இரண்டு விற்கிரைய ஒப்பந்த பத்திரங்கள் செல்லாது என்று எந்த ஒரு பரிகாரமும் எனது வழக்கில் கோரவில்லை என்றால் சரிதான். மேற்படி நல்லிசண்முகசுந்தரம் மற்றம் விஸ்வலிங்கசாமி ஆகிய இருவரும் தங்கள் பெயரில் ஏற்பட்ட விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தின் பேரில் அ.வ.எண்.344/2008, அ.வ.எண்.266/2008 என்ற இரு வழக்குகளை நீதிமன்றங்களில் கிரைய பத்திரம் செய்து கொடுக்க கேட்டு வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றம் மூலம் பதிவு கிரையம் ஏற்பட்டு விட்டது என்றால் சரிதான். அந்த வழக்குகளில் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய கேட்டு இந்த வழக்குளில் நாங்கள் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான்.

5. மேற்படி நல்லிசண்முகசுந்தரம் மற்றும் விஸ்வலிங்கசாமி ஆகிய இருவரும் முதன் முதலில் பனியன் கம்பெனி வைக்க கட்டிடம் கட்ட இடம் கேட்டு தான் எங்களிடம் வந்தார்கள் என்றால் சரிதான். அந்த பனியன் கம்பெனிகாரர்களிடம் சொத்தை விற்று வரும் கிரைய தொகையை எனது சகோதரி கமலத்திற்கு பணம் செட்டில்மெண்ட் செய்து விடுகிறோம் என்று எனது அப்பா, எனது அண்ணன் நடராஜ் மற்றும் புரோக்கர்கள் சேர்ந்து எங்களை ஏமாற்றி விட்டார்கள் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். அவ்வாறு எங்களை ஏமாற்றிய பிறகு நானும், எனது சகோதரியும் சென்று ஏன் எங்களை ஏமாற்றி விட்டீர்கள் என்று அவர்களிடம் கேட்டோமா? என்றால் இல்லை. மேற்படி இரண்டு விற்கிரைய ஒப்பந்த பத்திரங்களிலும் எனது அப்பாவும், எனது அண்ணாவும் மற்றும்

3-ம் பிரதிவாதியும் சேர்ந்து கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக அ.வ.எண். 209/2018 என்ற வழக்கில் பாரா-8, 10-வது வரியில் எங்களது வழக்கிலேயே சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அதேபோல் அ.வ.எண்.210/2018 என்ற வழக்கிலும் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான்.

6. தாவா சொத்தை எனது அண்ணன் நடராஜ் விற்க முயற்சித்த போதெல்லாம் நாங்கள் சொத்தை காப்பாற்ற அதை தடுத்து வந்தோம் என்றால் சரிதான். எனது அப்பா நல்லிசண்முகசுந்தரம் மற்றும் விஸ்வலிங்கசாமி ஆகிய இருவருக்கும் அக்ரிமெண்ட் போட்டு கொடுப்பதற்கு முன்பாக வேறு யார் யாருக்கெல்லாம் கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நல்லிசண்முகசுந்தரம் மற்றும் விஸ்வலிங்கசாமி ஆகிய இருவருக்கும் எனது அப்பா சார்பாக நீதிமன்றம் கிரையம் செய்து கொடுத்துள்ள விபரத்தை அந்த பத்திரத்தின் நகல்களை எடுத்து பார்த்து தான் தெரிந்து கொண்டேன். அந்த பத்திரத்தை தான் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்துள்ளேன். அந்த கிரைய பத்திரங்களின் விபரங்களை எனது மகன் படித்து காட்ட நான் தெரிந்து கொண்டேன். எனது மகன் 10-ம் வகுப்பு வரை படித்துள்ளார். அந்த கிரைய பத்திரங்களை படித்து பார்த்த போது தான் எனது அப்பாவிடம் அவர்கள் அக்ரிமெண்ட் செய்து கொண்டுள்ள விபரத்தை தெரிந்து கொண்டேன். மேற்படி விபரம் இந்த வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு முன்பாகவே நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்குகளை தாக்கல் செய்து 15 வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான். கடந்த 15 ஆண்டுகாலமாக நல்லிசண்முகசுந்தரம் மற்றும் விஸ்வலிங்கசாமி ஆகிய இருவரின் பெயரில் ஏற்பட்டுள்ள அக்ரிமெண்ட்டை சம்பந்தப்பட்ட வழக்கு கோப்பில்

இருந்து நகல் எடுத்து பார்க்க நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அதனால் நான் மேற்படி இரண்டு அக்ரிமெண்ட்களையும் அதில் உள்ள விபரங்களையும் நான் நேரடியாக கண்ணில் கூட பார்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு பட்டா, சிட்டா லோகநாதன் பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது அப்பா இருக்கும் போது பட்டா, சிட்டா எல்லாம் எங்கள் பெயருக்கு மாற்றி வைத்திருந்தார். நாங்கள் இந்த வழக்குகளை இந்நீதிமன்றத்தில் எனது தகப்பனாருக்கு எதிராகவும் தாக்கல் செய்த பின்னிட்டும் எனது அப்பாவை நான் தான் பராமரித்து வந்தேன். நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு 5 வருடத்திற்கு முன்பாக எனது அப்பா என்னை கேட்காமல் எந்த ஒரு செயலும் செய்யமாட்டார் என்றால் சரிதான். அதேபோல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு 5 வருடத்திற்கு முன்பாக எனது அப்பா என்னை கேட்காமல் எந்த ஒரு கையெழுத்தும் செய்யமாட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு எனது அப்பா என்னை கேட்காமல் ஏதேனும் கையொப்பங்கள் செய்திருந்தால் அதை என்னால் கட்டுப்படுத்த முடியாது. நல்லிசண்முகசுந்தரம் கோர்ட் மூலம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தின் பேரில் நல்லிசண்முகசுந்தரம் நிறைவேற்று மனு எண்.104/2010 என்ற மனுவை தாக்கல் செய்து சொத்தின் சுவாதீனத்தையும் 01.03.2013-ம் தேதியில் எடுத்து விட்டார் என்றால் அப்படி யாரும் தோட்டத்திற்கு வரவில்லை. அதனால் அ.வ.எண்.209/2018 வழக்கின் 3-ம் பிரதிவாதி தாக்கல் செய்து பெற்ற அ.வ.எண்.344/2008 வழக்கில் பெற்ற தீர்ப்பு எங்களை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. அதேபோல் அ.வ.எண்.210/2018 வழக்கின் 3-ம் பிரதிவாதி தாக்கல் செய்து பெற்ற அ.வ.எண்.266/2008 வழக்கில் பெற்ற தீர்ப்பு எங்களை கட்டுப்படுத்தும்

என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு வழக்குகளிலும் கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரங்கள் தான் தாவா சொத்து குறித்த முந்தைய ஆவணங்கள் என்றால் அது எங்களுக்கு தெரியாது. எனது அப்பா எங்கள் பெயரில் தான் செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வைத்து கொடுத்துள்ளார். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரமானது மேற்படி இரண்டு கிரைய ஒப்பந்த பத்திரங்களுக்கு பின்னிட்டு எங்களால் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால் அந்த செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி நல்லிசண்முகசுந்தரம் மற்றும் விஸ்வலிங்கசாமி ஆகிய இருவரும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் தான் தாவா சொத்தை எனது அப்பாவிடம் விலை பேசி விற்கிரைய ஒப்பந்த பத்திரங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தின் பேரில் நீதிமன்றம் மூலம் பதிவு கிரையம் பெற்று சொத்தின் சுவாதீனத்தை நீதிமன்றம் மூலமே எடுத்துக்கொண்டு அனுபவித்து வருவதால் தாவா சொத்து முழுவதும் நல்லிசண்முகசுந்தரம் மற்றும் விஸ்வலிங்கசாமி ஆகிய இருவருக்கும் தான் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த நல்லிசண்முகசுந்தரம் மற்றும் விஸ்வலிங்கசாமி ஆகிய இருவரிடம் இருந்து நல்லெண்ணத்தின் அடிப்படையில் லோகநாதன் கடந்த 10.11.2011-ம் தேதியிட்ட பதிவு கிரையம் மூலம் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் மோசடியாக தயாரித்துக் கொண்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்ற லோகநாதனின் சுவாதீன அனுபவித்திற்கு இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் தான் தாவா சொத்திற்கு பட்டா, சிட்டா லோகநாதன் பெயரில் இருந்து வருகிறது என்றால் அவர் பொய்யாக பட்டா மாற்றி கொண்டுள்ளார். நாங்கள் மேற்படி உண்மை விபரங்களை மறைத்துவிட்டு

பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த வழக்குகளை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் நாங்கள் தூய கரங்களுடன் இந்த நீதிமன்றத்தை அணுகாததால் நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த 3 வழக்குகளையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 4.48 ஏக்கர் ஆகும். தாவா சொத்தானது ரோட்டை ஒட்டி உள்ளது என்றால் சொத்திற்கு தென்புறத்தில் காலேஜ் ரோடு உள்ளது. தாவா சொத்து தற்போது 7,8 கோடிக்கு விலை போகும் என்றால் சரிதான். இந்த வழக்குகளை நாங்கள் தாக்கல் செய்த பிறகு எங்களுக்கும், சொத்தை வாங்கிய லோகநாதனுக்கும் இடையே பல முறை அடிதடி பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். கடைசியாக கடந்த 3 மாதத்திற்கு முன்பு பிரச்சனை ஏற்பட்டது. அப்போது லோகநாதன் சுமார் 50 ஆட்களை அழைத்து வந்து கம்பி வேலியை வெட்டி விட்டு உள்ளே நுழைய முயற்சித்தார்கள், அதை நாங்கள் தடுத்து விட்டோம். அந்த 50 ஆட்களையும் நானும், எனது மகன், எனது மருமகள் ஆகிய மூவரும் தடுத்தோம், அப்போது போலீசும் வந்து விட்டது. நாங்கள் தான் 150 ஆட்களுடன் சென்று லோகநாதனின் ஆட்களை அடித்து விட்டு சொத்திற்கு உள்ளே சென்று சொத்தின் சுவாதீனத்தை எடுக்க முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. லோகநாதன் இதுநாள் வரையில் எங்களுடன் பேச்சுவார்த்தைக்கு வந்தாரா? என்றால் இல்லை. லோகநாதன் முறையாக கிரையம் பெற்று தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றும், நாங்கள் தான் பணம் பறிப்பதற்காக வேண்டி அடிக்கடி வீண் தகராறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்தில் எங்களுக்கு சட்டப்படி எவ்வித பாத்திய உரிமையும், அனுபவமும்

கிடையாது என்பதால் நாங்கள் தாக்கல் செய்துள்ள 3 வழக்குகளும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.01.26 19:25:49 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**